UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
30-7-1984
PERIODICALS
LIBRARY

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 15 ஜூலை் 1 இதழ் 166
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 30-7-84

## புறக்கோட்டை தீ விபத்து

## 4 கடைகள் சேதம்!

[கொழும்பு]

புறக்கோட்டையில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட தீ விபத்தினால் நான்கு கடைகள் சேதமடைந்தன.

இந்தத் தீ விபத்திற்கு மின்சார ஒழுக்கே காரணமென்று கூறப்படுகிறது.

புடவை, தோற்பொருட்கள் விற்பனைசெய்யப்படும் கடையொன்றில் மின்சாரக் கோளாறு காரணமாக முதலில் தீப்பற்றியதாகவும், இது பின்னர் அருகிலுள்ள ஏனைய மூன்று கடைகளுக்கும் பரவியதாகவும் கூறப்படுகிறது.

தீயணைப்புப் படையினர் உடனடியாக அழைக்கப்பட்ட போதிலும் கொழும்பில்நேற்று நீர்விநியோகம் சீராக இல்லாத காரணத்தினால் தீயணைப்புப் படையினர் உடனடியாகச் செயலில் இறங்க முடியவில்லை. ஆனாலும் அவர்கள் பின்னர் செயலில் இறங்கியதால் ஏனைய கடைகள் பாதுகாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் எவருக்கும் காயமேற்படவில்லையாம்.

# யாழ். ஒலிபரப்பு நிலையத்துக்கு மூடுவிழா?

(யாழ்ப்பாணம்)

### மண்டைதீவில் உள்ள யாழ்ப்பாணம் ஒலிபரப்பு நிலையத்துக்கு மூடுவிழா நடக்கிறதா?

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஓர் உப ஒலிபரப்பு நிலையமாக மண்டைதீவு ஒலிபரப்பு நிலையம் விளங்கியது தெரிந்ததே.

கடந்த சில தினங்களாக மத்திய அலைவரிசை ஒலிபரப்பில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் தடையைத் தொடர்ந்து ஏற்பட்ட சந்தேகம் மண்டைதீவு ஒலிபரப்பு நிலையத்தில் இப்பொழுது நடைபெறும் 'அகற்றுவேலை'களைத் தொடர்ந்து ஊர்ஜிதமாகிவருகிறது.

தொழில் நுட்பக் கோளாறு என்றும் திருத்த வேலைகள் என்றும் முன்னர் காரணம் கூறப்பட்ட போதிலும், சில தொழிலாளர்கள் இரவு பகலாக அங்கிருந்து மேற்கொண்டுவரும் வேலைகளைக் கவனிக்கும்போது; ஒலிபரப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்படும் அறிகுறிகளே காணப்படுவதாகத் தெரிய வருகிறது.

கடந்த சில தினங்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகள் சிற்றலை வரிசையில் மட்டுமே மிகவும் தெளிவற்று யாழ்ப்பாணத்தில் கேட்கப்படுவது குறிப்பிடத்தக்கது

## "தேர்தலைச்சந்திக்க தயார்" - எம்.ஜி.ஆர்.

(சென்னை)

இந்திய லோகசபைத் தேர்தல்களை எந்தச் சமயத்திலும் எதிர்நோக்கத் தயாராகவிருப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி, ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அ. தி. மு. க. இளைஞர் மாநாட்டை நேற்றுத் தொடக்கிவைத்து உரையாற்றுகையிலேயே தமிழக முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

லோகசபைத் தேர்தல் மட்டுமன்றி வரவிருக்கும் எந்தத் தேர்தல்களையும் எந்தச் சமயத்திலும் எதிர் நோக்கத் தமது கட்சி தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக அமைச்சரவையில் விரைவில் மற்றுமொரு மாற்றம் இடம்பெறலாம் என்றும் அவர் சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ஆஸ்பத்திரிகளில் சிற்றூழியர் நியமனம்
### செப்டம்பரில் நேர்முகப் பரீட்சை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளிலும் நிலவும் சிற்றூழியர் பற்றுக்குறையை நீக்குவதற்காக அடுத்தமாதம் 40 சமயாசமய சிற்றூழியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற பெயர்ப்பட்டியலில் இந்த சமயாசமய சிற்றூழியர்கள்தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் இவர்களுக்கான

(8ம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவுச் சம்பவம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புசந்தியிலுள்ள பேக்கரி ஒன்றுஇனம் தெரியாதவர்களினால் நேற்று நள்ளிரவு தீக்கிரையாக்கப்பட்டுள் ள து.

பேக்கரி கட்டிடத்திற்கு பக்கத்திலிருந்த சிகை அலங்கார நிலையம் ஒன்றும் மற்றொரு கடையும் இதனால் பெரிதும் சேதமடைந்தது.

## மின்கம்பத்தில் இளைஞர் சடலம்

[வவனியா]

வவனியா - மன்னார் வீதியில் பட்டாணிச்சு புளியங்குளம் என்னுமிடத்தில் மின் கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலத்தின் கழுத்தில் தொங்கவிடப்பட்ட நிலையில் காணப்படும் ஒரு பிரசுரத்தில் குறிப்பிட்ட நபர் 'கொலை' கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, "காத்தான் படைப் பிரிவினர்" உரிமைகோரியுள்ளனர்.

சுமார் 30 வயதுள்ள இளைஞரின் இச்சடலம் வவனியா ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## அசாமில் வெள்ளப்பெருக்கு 17 பேர் பலி!

(புதுடில்லி)

அசாமில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் இறந்தோர் தொகை 17 ஆக அதிகரித்துள்ளது.

மாநிலத்தில் பிரமபுத்ரா மற்றும்உபநதிகளில் வெள்ளம் அதிகரித்து வருவதினால் மாநிலத்தில் வெள்ள அபாயம் அதிகரித்து வருகிறது.

இராணுவம் உதவிப்பணி மீட்பு நடவடிக்கைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளது.

## டிப்போ அத்தியட்சகருக்கு இப்படி ஓர் அனுபவம்

(கீரிமலை)

கீரிமலைக் கடலில் ஆடிஅமவாசை தீர்த்தமாடியவர், தமது உடைமைகளை இழந்தார்! இந்த அனுபவம் வட பிராந்திய போக்குவரத்துச் சபை டிப்போ அத்தியட்சகர் திரு பி. யு, மகாலிங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

கடலில் குளித்துவிட்டு கரை சேர்ந்த போது தமது உடைமைகள் வைக்கப்பட்டிருந்த பையைக் காணவில்லை என்றும். இந்தப் பையில் தமது மணிபர்ஸும் பெறுமதிமிக்க மூக்குக் கண்ணாடியும் மற்றும் உடுப்புகளும் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வங்கிக் கிணற்றில் இளைஞர் சடலம்!

[கிளிநொச்சி]

பரந்தன் மக்கள் வங்கி வளவில் உள்ள கிணற்றில், அழுகிய நிலையில் காணப்பட்ட சடலம், மக்கள் வங்கியில் கடமையாற்றிய சிற்றூழியருடையதா?

மேற்படி கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் உருக்குலைந்த நிலையில் ஓர் இளைஞரின் சடலம் எடுக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் யாருடையதுஎன்பது நேற்று மாலைவரை கண்டுபிடிக்கப் படாத போதிலும், பரந்தன் மக்கள் வங்கியில் கடமையாற்றிய ஓர் சிற்றூழியரின் சடலமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சடலம கிளிநொச்சி ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர் அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க கட்டிட இடிபாடுகளுக்குள்கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரம் காணாமல்போன பருத்தித்துறையைச் சேர்ந்த என். தவரத்தினத்தினுடையதென்று அவரது சகோதரரினால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

கட்டட இடிபாடுகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட இரண்டரை அங்குல நீளமான 12 எலும்புத் துண்டுகளும், கைக்கடிகாரமும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து அவை மனித எலும்புகள்தானா என்பதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி பணிக்கப்பட்டிருந்தார்.

ஏப்ரல் 9-ம் திகதி யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் எரிக்கப்பட்டபோது காணமல் போனவர்களில் ஒருவரின் சகோதரர் இன்ஸ்பெக்டர் முத்துத்தம்பியை நேற்று முன்தினம் சந்தித்து கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரத்தைப் பார்வையிட விரும்புவதாகத் தெரிவித்தார்.

அவரிடம் கைக்கடிகாரம் காட்டப்பட்டதும் அதனை நன்கு பார்வையிட்ட பின்னர் அது காணமல்போன தனது சகோதரனுடையது என்று அடையாளம் காட்டினார். இதனைத்தொடர்ந்து பொலிஸ் விசாரணையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

பொலிசார் அவரின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்ய ஏற்பாடு செய்துள்ளனர்.

சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது காணமல்போன மற்றுமொருவர் புன்னாலைக்கட்டுவனைச்சேர்ந்த கே.ஜெயசந்திரனாகும். (க)

## உண்ணாவிரதமிருக்க கூட்டணிக்கிளை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் ஒரு நாள் உண்ணாவிரதம் இருக்க தமிழர் விடுதலை கூட்டணி காங்கேசன்துறைத் தொகுதிக் கிளை, கூட்டணித் தலைமைப் பீடத்திடம் அனுமதி கோரியுள்ளது.

காங்கேசன்துறையில் உண்ணாவிரதம் நடத்துவது பற்றி இன்று ஆலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்று கூட்டணி நிர்வாகச் செயலாளர் திரு எம். ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

ஆகஸ்ட மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை காங்கேசன்துறையில் உண்ணாவிரதத்தை நடத்த காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையினர் விரும்புவதாக கூறப்படுகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச் ஜளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு மிக அண்மையில் போக்குவரத்து வசதிகளுடன் வீடு கட்டுவதற்கு ஏற்ற 5 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு: என். இரகுநாதன், மணியகாரன்வளவு, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. 1122

Baby Belling Cooker விற்பனைக்குண்டு. சுமங்கலி, கட்டுவன், தெல்லிப்பளை. 1115

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில், மகளிர் கல்லூரி அண்மையில், குடியிருப்புக்கேற்ற 15 பரப்புக் காணி, துண்டுகளாகவிற்பனைக்குண்டு. Dr. சுவாமிநாதனுடன் அல்லது இளைப்பாறிய றிபேக் ஆசிரியர் கந்தசாமியுடன் தொடர்புகொள்ளவும். உங்கள் விலையை No. 85, Isipathana mawatha, Colom-bo-5, விலாசத்திற்கு எழுதவும். 1092

மொறிஸ்மைனர் EL 409 வார் (விலை 15000/-)விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. துரைராஜா, மதவடி ஒழுங்கை, டலியஊடப்பு. 1088

நல்லநிலையிலுள்ள "Barratt and Robinson" புதிய பியோனே விற்பனைக்குண்டு. தொடர்பு: 518, நாவலர் றேட், நல்லூர், யாழ்ப்பாணம். 1086

## தேவை

ஜவுளி வியாபாரத்தில் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் தேவை, திறமைக்கு ஏற்ப சம்பளமும், தங்குமிடவசதியும் வழங்கப்படும். தொடர்பு ராகுலசூரியன்ஸ், 122 பிரதான வீதி, பருத்தித்துறை. 1064

எலக்றிக் வெல்டிங் (கேற், கிறில் செய்வதில்) காஸ்வெல்டிங், கம்மாலைவேலை என்பவற்றில் அனுபவம் வாய்ந்த ஆட்கள் தேவை. வேலைபழக விரும்புவர்களும்விண்ணப்பிக்கலாம். தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். தொடர்பு: து. சத்திவேல், வல்லை மெற்றல் இண்டஸ்றீஸ், காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை. 1102

யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 34 வயதுடைய லக்னத்தில் செவ்வாய் உடைய மணமகளுக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றார்கள். போதியளவு சீதனம் கொடுக்கப்படும். (சைவ போசனம் விரும்பத்தக்கது) விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 1116 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்: 1116

## கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதம், 15 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் நுணுக்கமான முறையில் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்காகக்குறைந்த காலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். K. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். 1073

## வாடகைக்கு

சகல வசதிகளுடனும், பரந்த நிலப்பரப்பைக் கொண்ட 4 படுக்கை அறைகளைக்கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: 518, நாவலர் றேட், யாழ்ப்பாணம். 1087

## FOR SALE

Pure Alsation Pups (6 weeks old) and 2½ years Alsation Female Dcg Selvadurai, 53/1, Athiady New Road, Jaffna. 1107

## பயிற்சி

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க கைத்தொழில் மண்டபத்தில் வெளிநாடுகளில் இலகுவில் வேலை பெறக்கூடிய முறையில் நவீன தச்சு வேலைப் பயிற்சியளிக்கப்படவுள்ளது. பயிற்சியின் போது பயிலுனர்களுக்கு சிறு ஊதியமும், ஒன்பது மாதப் பயிற்சி முடிவில் தொழிற் திணைக்களத்தினால் சான்றிதழும் வழங்கப்படும். இப்பயிற்சி பெறவிரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட வட்டுக்கோட்டைத் தொகுதி இளைஞர்கள் தங்கள் பெயர் விபரங்களை செயலாளரிடம் (நா. சொக்கலிங்கம் உடை தயாரிப்பு பயிற்சிவளவு, பிராதன வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு) 02 - 08 - 84 வியாழக்கிழமைக்கு பிந்தாமல் பதிவு செய்து கொள்ளவும் 1121

கலர் பிலிம் இனம்!
விபரங்கள் நேரில்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## பிறந்ததின வாழ்த்து

### சர்மிளா



விசுவமடுவைச் சேர்ந்த மார்க்கண்டு, பாமினி தம்பதிகளின் செல்வப் புதல்வி சர்மிளா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 30-7-84 திங்கட்கிழமை கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, பெரியப்பா பெரியம்மா. மாமாமார், மாமிமார். அப்பாச்சி, அப்பப்பா. சின்னத்தம்பி, மாமா ஆகியோர் அதிசயவிநாயகர் அருளால் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். 1047

## புதிய மஞ்சம்

[அச்சுவேலி]

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசாமி கோவிலுக்கு அவ்வூர் மக்களினால் புதிய மஞ்சம் ஒன்று சிற்பக்கலா கேசரி திரு.ச.ஜெயராசாவினால் துரிதமாக அமைக்கப்பட்டு வருகிறது. ஐந்து இலட்சம் ரூபா மதிப்பீடுள்ள இம் மஞ்சம் 21, அடி உயரமுடையதாகும்.

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெரு 26ம் இலக்கத்தில் வசிக்கும் காலஞ்சென்ற டாக்டர் சுப்பிரமணியம் தனபாலசிங்கத்தின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிருவாகத்தத்துவப் பத்திரம் விடயத்தில், தனபாலசிங்கம் கைம்பெண் வசந்தாதேவி. இல; 26, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழ. இல: தத்துவம்/3808

எதிராக

பராயமற்றவர்
1. தனபாலசிங்கம் மகன் முகுந்தன்

பராயமற்றவர்
2. தனபாலசிங்கம் மகன் நர்மாதன்

பாதுகாவலர்
3. எம். எஸ். பூபாலசிங்கம் எல்லோரும் இல: 26, 2ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். பராயமற்ற 1ம் 2ம் எதிர்வாதிகளின் பாதுகாவலர் 3ம் எதிர்வாதி.

எதிர்வாதிகள்

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத் ல்தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஆவணி மாதம் 3ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாககப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றது.

1984ம் ஆண்டு ஆடி மாதம் 11ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**கு.குலசிங்கம்**
பதிவாளர்

வரைந்தது
**வ.மயில்வாகனம்**
மனுதாரின் சட்டத்தரணி
1117

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## சின்னமடு மாதா ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்

வட பகுதியின் பிரசித்தி பெற்ற சின்னமடு புனித செபமாலை மாதா ஆலய வருடாந்த திருவிழா நேற்றுமுன் தினம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

அடுத்த மாதம் 3 ம் திகதி வரை நடைறும் மாலை ஆராதனை பகல் 5 மணிக்கு ஆரம்பாமகும், 4 ம் திகதி மாலை ஆராதனையும், மறுநாள் காலை 6-30 மணிக்கு திருநாள் திருப்பலியும் நடைபெறும். உற்சவத்திற்கான ஒழுங்குகளை பங்குத்தந்தை வண. றெஜிஸ்ராஜநாயகம் செய்துள்ளார்.

## ஹோமியோபதி மருந்து அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கை சுகாதார அமைச்சின் ஹோமியோபதி சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க இந்திய உயர் ஸ்தானிகர் திரு.எஸ்.ஜே.சத்வால் ஹோமியோபதி மருந்துகளை சுகாதார அமைச்சர் திரு.ரஞ்சித் அத்தபத்துவிடம் அண்மையில் கையளித்தார்.

இம் மருந்துகள் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டவை இவை அரசினால் கண்நோய், டெங்கு காய்ச்சல் முதலிய நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக உபயோகிக்கப்படும் ஹோமியோபதி சபையினர் இவற்றை இலவசமாக வழங்குவார்கள்.

**பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு**

பித்தளை பொன் உருக்கும் கைத்துரித்தி விற்பனைக்குண்டு

**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**

257, காங்கேசன்துறைவீதி-யாழ்ப்பாணம்.

1108

**உஷா!!! குளிர்சாதனப்பெட்டி**

முற்பணம்: Rs. 2700/- மாதாமாதம்: Rs. 290/-

(5 வருட உத்தரவாதம்)

**த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

TFC

249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

## 2வது சிராத்ததினம்



திரு. சி. க. ஆ.
**கதிரவேலு**
பிரபல வர்த்தகர்
(பெற்றோல் செட், துறைமுகம், காரைநகர்.)

தோற்றம்:
20 06-1914

மறைவு:
22-07 1982

உமது ஆத்மா சாந்தியடைய முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
பலகாடு, காரைநகர். (1111)

## ஓராண்டு நினைவஞ்சலி

திரு. த. கதிரவேலு
[ஓய்வு பெற்ற ஆசிரியர்]



தோற்றம்:
23–07–1916

மறைவு:
25–07–1983

ஆலமரம் நீங்கள்-அதில்
ஆறுதல் தேடினோம்
நாம்
வேரோடு மரம் சாய்ந்த
போது
அந்த விழுதுகளை
எப்படி பிரிக்க முடியும்
நாம் தேடியே உங்களை தினமும் அழைக்கிறோம்
குரல் கேட்கவில்லையா உங்களுக்கு
கலங்குகின்றோம் நாம்
உங்கள் பாசங்களின் நிழலில்

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
**அன்பு மனைவி, மக்கள், சகோதரர்கள்.**
மாவிட்டபுரம் கிழக்கு, தெல்லிப்பளை. (1112)

## சைவப் பெரியார் குருபூசை

2-8-1984 வியாழக்கிழமை காலை 8-30 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் இக் கல்லூரி இந்து மாமன்றத்தினற் கொண்டாடப்படும்.

இத்தருணம் எமது அங்கத்தவர்களைச் சமூகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

க.கிருஷ்ணபிள்ளை
தலைவர்

அ.சோமசுந்தரம்பிள்ளை
காரியதரிசி

சைவப் பெரியார் ... சபை
1110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவாலய மணிகள் ஒலிக்க 23-வது ஒலிம்பிக் ஆரம்பம்!

## பதினாறு வார்த்தைகளுடன் றீகன் ஆரம்ப உரை!

## மைதானத்தின் நடுவே 'ராக்கெட்' மனிதன்!

லாஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 29,

**தேவாலய மணிகள் ஒலிக்க 23-வது சர்வதேச ஒலிம்பிக்பந்தயங்கள் கண்கவர் நிகழ்ச்சிகளுடன் நேற்று லாஸ் ஏஞ்சல்ஸ் கொலிஸி யம் ஞாபகார்த்த விளையாட்டரங்கில் ஆரம்பமானது. (இலங்கை நேரப்படி 29ந் திகதி காலை 5 மணி) அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட்றீகன் பதினாறு வார்த்தைகள் கொண்ட ஆரம்ப உரையை நிகழ்த்தி இப்பந்தயங்களை ஆரம்பித்துவைத்தார்.**

1936ம் ஆண்டு பேர்லினில் நடந்த ஒலிம்பிக்போட்டிக ளில் 4 தங்கப்பதக்கங்களைப் பெற்ற அமெரிக்க கறுப்ப ரான ஜெஸி ஓவன்ஸின் பேத் தியாரான ஜீன் என்பவர் ஒலிம்பிக் தீபத்துடன் அரங் கினுள் பிரவேசித்தார். பின் னர் இத்தீபத்தை 24 ஆண்டு களுக்குமுன்னர் ரோமில் இடம்பெற்றஒலிம்பிக்கில் தங் கப்பதக்கம் பெற்ற அமெரிக்க வீரரான றொபேர்ட் ஜோன் சன் என்பவர் கொலிஸியம் ஞாபகார்த்த அரங்கில் ஏற்றி வைத்தார். இதனைத்தொடர் ந்து லாஸ் ஏஞ்சல்ஸ் நகர தேவாலயங்களின் மணிகள் ஒலித்தன ஆயிரக்கணக்கான புறாக்கள் அரங்கில் இருந்து பறக்கவிடப்பட்டன.

ஒலிம்பிக் பந்தயசத்தியப் பிரமணத்தை எட்வின் மோசஸ் என்ற அமெரிக்க வீரர் செய்துவைத்தார்.

இவ் ஆரம்பவைபவங்களில் சுமார் பத்தாயிரம் கலைஞர் கள் கலந்துகொண்டனர். கலிபோர்னியா மாநில ஹொ லிவூட் திரைப்படநிறுவனத் தின் பாணியிலேயே இசை நிகழ்ச்சிகள் யாவும் தயாரிக் கப்பட்டிருந்தன.

நிகழ்ச்சிகள் ஆரம்பமாகிய சிலநேரத்தில் ராக்கெட் போன்ற ஒன்றில் மைதானத் தின்நடுவே ஒருவர் வந்திறங் கிப் பார்வையாளர்கள் அனை வரையும் குதூகலத்தின் உச் சிக்கே கொண்டுசென்றார்.

கலைநிகழ்ச்சிகளில் கல்லூரி மாணவர்களுடன், பலமுன் னணி இசையமைப்பாளர் களும் கலந்துகொண்டனர். இசைக்கேற்ப மைதானத்தின் நடுவே பல்வேறு வடிவங்க ளில கலைஞர்கள் அணிவகுத் துப் பார்வையாளர்களை மகிழ் வித்தனர்.

2௩-வது ஒலிம்பிக்கில் பங்கு கொள்ளும் நாடுகளின் அணி நடைநிகழ்ச்சியில் 'ஒலிம்பிக்' ஆரம்பிக்கப்பட்ட தேசமான கிரேக்கம் முன்னே சென்றது அதனைத்தொடர்ந்து அமெரிக்காவும் ஏனைய நாடு களும் சென்றன. அமெரிக் காவே 597 வீரர்கள், வீராங் கனைகளுடன் அதிகளவு போட் டியாளர்களை இவ்ஒலிம்பிக்கில் ஈடுபடுத்துகின்றது. 141 நாடு களைச் சேர்ந்த சுமார் 8000 போட்டியாளர்கள் இவ் அணி நடை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இதேவேளை பாதுகாப்பு நட வடிக்கைகள் யாவும் மிகவும் தீவிரமாக இருந்தன. யுத்த காலம் தவிர்ந்தபொது வைபவமொன்றுக்கு உலகில் இதுவே முதல்தடவையாக அதிகூடுதல் பாதுகாப்பு வழங் கப்பட்டுள்ளது. என்று இப் பாதுகாப்புக் குறித்துக்கருத்து வெளியிடப்பட்டது. (கி)

## இலங்கைத் தமிழர் பிரச்னை:

## முன்னாள் தொழிற் கட்சித் தலைவர் மைக்கல்பூட் வலியுறுத்து

லண்டன், ஜூலை29,

இலங்கைத் தமிழர்களுக்கு நியாமான சலுகைகள் வழங் கப்படவேண்டுமெனவலி யுறுத்தியுள்ள பிரிட்டிஷ் எம் பிக்களில் முன்னாள் தொழில் கட்சித்தலைவர் திரு. மைக் கேல் பூட்டும் ஒருவராவார்.

திரு. மைக்கேல் பூட் உட் பட சுமார் 60 பிரிட்டிஷ் எம் பிக்கள் இலங்கைத்தமிழர் களுக்கு ஆதரவாக மகஜர் ஒன் றில் கைச்சாத்திட்டிருக்கின் றனர்.

கடந்த ஆண்டு பிரிட்டனில் இடம்பெற்ற பொதுத் தேர்த லில் ஆளுங்கட்சியான கன்சர் வேட்டிவ்கட்சியை எதிர்த்த பிரதான கட்சியான தொழில் கட்சிக்கு திரு. மைக்கேல் பூட் தலைமை வகித்தார். அத் தேர்தலில் இக் கட்சி தோல்வி கண்டதைத்தொடர்ந்து தமது பதவியை அவர் இராஜினாமாச் செய்தார். ஆயினும் இவர் பிரிட்டனில் ஒரு செல்வாக் குள்ள அரசியல் வாதியாகக் கருதப்படுகிறார். (கி)


PHOTO STAT

ஹோம் பிறின்ஸ் கொம்பனியின் மற்று மொரு சேவை

தெளிவான பிரதிகளுக்கும் பெரிதுபடுத்தல், சிறிதுபடுத்தலுக்கும் (ENLARGEMENT, REDUCTION)

ஹோம் கொப்பியேஸ் (HOME COPIERS)

போட்டோ ஸ்டாட்டை நாடுங்கள்.

கன்னாதிட்டி சந்தி, கஸ்தூரியார் வீதி

ஹோம் பிறின்ஸ் கொம்பனி

82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24310


## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவப்பெரியார் சு.சிவபாத சுந்தரம் எழுதிய சைவபோதம் 1-ம் புத்தக வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை காலை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடை பெறும். செல்வி தங்கம்மா அப் பாக்குட்டி தலைமையில் நடை பெறும் இவ்விழாவில் 'இந்து சாதனம்' பத்திராதிபர் திரு. நம. சிவப்பிரகாசம் நூல் வெளியீட்டுரை நிகழ்த்து வார். (ப)

## ★ ஒலிம்பிக் செய்திகள் ★

### நேபாள வீரர்

ஒலிம்பிக்கில் கலந்து கொண்டுள்ள வீரர்கள் அனை வரும் எப்படியாவது ஒருபதக்கத்தை சுவீகரித்துவிட வேண்டுமென்பதிலேயே ஆர்வங்காட்டுகின்றனர். ஆனால் நேபாளஒலிம்பிக் வீரரான பைகுந்தா மெநாந் தர் ஒரு விதிவிலக்காக இருக்கிறார்.

மரதன் வீரரான இவர் வெற்றி பெறுவதைவிட பங் கேற்பதையே முக்கியமாகக் கருதுகிறார். 1976 மொன் றியல் ஒலிம்பிக் மரதன் ஓட்டத்தில் 50-வது இடத் தைப் பெற்றார். 84 ல் மாஸ்க்கோவில் 37-வது இடத் துக்குவந்தார். இத்தடவை மரதனில் பங்கேற்கும் 111 பேரில் 20-வது இடத்தைப் பெறுவேன் என்கிறார் இவர்.

### சப்பாத்து அளவில்லை

மடகஸ்கார் தீவைச் சேர்ந்த மரதன் ஓட்ட வீரர் ஒரு வர் ஒலிம்பிக் வைத்திய சிகிச்சைப்பிரிவுக்குச் சென்றார். அங்கு தமது காலல் பொக்களங்கள் தோன்றியிருப்ப தையும், பெருவிரல்நகம்கழன்றிருப்பதையும், காண்பித் தார். தமக்கு ஏதோ வியாதி என்றே அவர் கருதினார். ஆனால் வைத்தியர்கள் அவரது ஓட்ட சப்பாத்துக்கள் அவரின் பாதங்களுக்குச் சிறியனவாக இருப்பதே இவற்றுக்குக்காரணம்என அறிந்தனர். கால்புண்களுக்கு சிகிச்சையளித்ததுடன் புதிய சப்பாத்துச் சோடியொன் றையும் வாங்கும்படி அவருக்கு சிபார்சுத் துண்டில் எழுதியுள்ளனர்.

### இராணுவத்தளம்

ஜப்பானிய நிருபர் ஒருவர் ஒலிம்பிக் பந்தயப் பிர தேசம் ஒரு இராணுவத்தளம் போல் இருக்கிறதெனக் கூறியுள்ளார்.

உண்மைதான்! 100 ஹெலிகாப்டர்கள், 330 M-16 ரைபிள்கள், 3,93,000 சுற்றுத் நோட்டாக்களுடன், வெடிபொருட்களை மோப்பமிடும் 14 நாய்களும் பாது காப்பில் ஈடுபடுகின்றன.

### அமெரிக்காவில் புகலிடம்

இத்தாலிய ஒலிம்பிக் வீரர் ஒருவர் அமெரிக்காவில் புகலிடம் கோரியுள்ளார். இவரின் கோரிக்கை ஒலிம்பிக் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வியப்பளித் தது. அவர் ஏதும் கல்வி விடயமாக அனுமதிகோரு கின்றார் என்றே அவர்கள் முதலில் நினைத்தனர். பின் னர் அது அரசியல் புகலிடம் என அறியப்பட்டது. அவரது கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது. (கி)

# ஜம்மு-காஷ்மீர்பாக்எல்லையில் இந்தியத் துருப்புகள் குவிப்பு!

புதுடில்லி, ஜூலை 29

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தி லுள்ள இந்திய பாகிஸ்தான் எல்லையில் இந்திய துருப்புக் கள் பெருமளவில் நிறுத்தப் பட்டுள்ளன. இவ்எல்லைப் பகுதி வழியாக இம்மாநிலத் தினுள் சில வெளிநாட்டுவிஷ மச் சக்திகள் ஊடுருவுவது கண்டுபிடிக்கப்பட்டதைய டுத்தே இந்நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இவ்எல்லைப்பகுதியில் மூன்று பாகிஸ்த்தானியர்களை இந்தி யப்படைகள் நேற்றுக்கைது செய்தன. இவர்களிடம் இந் தியாவில் அரசுக்கெதிராகதீய சக்திகளைத் தூண்டிவிடும் வகையில் சில ஆவணங்கள் இருக்கக்காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதே வேளை இந்திய அர சின் பாதுகாப்பிலுள்ள அகில இந்திய சீக்கிய மாணவ சம் மேளனத்தைச் சேர்ந்த சிலர் தமக்கு வெளிநாட்டுச் சக்திக ளுடன் தொடர்பிருந்ததைத் [illegible]

இவர்கள் பாகிஸ் தானின் புலனாய்வு நிறு வனத்துடன் தமக்குத்தொடர் புகள் இருந்ததாகக் குறிப்பிட் டனர்.

இந்தியத் துருப்புகள் கிழக்கே அஸாம் மாநிலத் தில் பங்களாதேஷ் எல்லைப் பகுதியிலும் நிறுத்திவைக்கப் பட்டுள்டன. இங்கும் சில வெளிச்சக்திகளின் ஊடுருவல் கள் இடம்பெறுவது தெரிய வந்துள்ளது. (கி)

## தேச விரோத சக்திகளுடன் பரூக் அப்துல்லா தொடர்பு!

### ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு தகவல்

ஸ்ரீநகர், ஜூலை 29

ஜம்முகாஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா இந்திய அரசுக்கு விரோதமான வெளிச் சக்தி களுடன் தொடர்பு வைத்தி ருந்தார் என்று இம்மாநில அரசாங்கம் குற்றஞ்சாட்டி யுள்ளது.

இம்மாநிலத்தில் ஆட்சியி லிருந்த தேசியமகாநாட்டுக் கட்சியை இம்மாநில ஆளு நர் பதவிநீக்கம் செய்தது சரி யானதே என்று புதிய மாநில அரசு வெளியிட்ட அறிக்கை யொன்றிலேயே மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட்டது.

அரசியல் அமைப்பு, சட்டம், தேசியநலன் ஆகியவற்றை மீறும் விதத்தில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா இயக்கினார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது

பரூக் அப்துல்லாவின் தேசிய மகாநாட்டுக் கட்சி இந்தியா வுக்கு விரோதமான வெளிச்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தாயே, நான்பெரியவன், நான் பிராம்மணன், அவர்கள் குறைந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்பன போன்ற கருத்துக்களையெல்லாம் என்னிடத்து இல்லாது அழித்து விடுவாயாக. நாம் எல்லோரும் பல்வேறு ரூபங்களில் உள்ள நீயே அன்றி வேறு யாவர்.

ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## சர்வதேச மன்னிப்புச்சபைக்கு டபிள் சலாம்!

புராணங்களைச் சுவைக்கும் சமூகத்திற்கு வரலாற்று உணர்வு மிக மத்திமம் என்று கேலியாகச் சொல்கிறார் தத்துவமேதை பேட்டிரண்ட்ரசல்.

மேற்கையும், கிழக்கையும் பிரித்துக் காட்டி கிழக்கு நாடுகளில் வரலாறு —விஞ்ஞான ரீதியில் எழுதப்படும் வரலாறு— வற்றிக் கிடப்பதை விளக்க ரசல் பிரபு இவ்வாறு கூறியிருக்கலாம்.

இதில் உண்மையில்லாமலில்லை. காசிமாநகரில் அரிச்சந்திரன் மனைவியை விலை கூறி விற்றதும்; மதுரைச் சோமசுந்தரர் வந்தியின் பிட்டுக்கு மண் சுமந்ததும் எங்கள் மக்களுக்கு வாய்பாடம். ஆனால் கடந்த ஐம்பது வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கு தக்க ஆதாரம் உண்டா? பழைய பத்திரிகைகள்தான் தஞ்சம்.

வரலாறு என்னும் கலை மேனாட்டில், சிறப்பாக இங்கிலாந்தில் வளர்ச்சி பெற்றதை யார் ஆட்சேபிப்பர்? அங்கும் குறையில்லாமலில்லை. எப்பவோ நடந்த அட்டூழியங்கள் பற்றித் தவறான கருத்துக்கள் இன்றும் நிலவுகின்றன; ஆங்கிலேயர் என்றால் பிரெஞ்சுக் காரருக்கு நஞ்சு. ஐரிஷ்மக்களின் துவேஷம் சொல்லத்தேவையில்லை. கிறித்துவை சிலையில் அறைந்தது பற்றி யூதரை கிறித்தவர்கள் இன்றும் பழி சொல்கிறார்கள். இவையெல்லாம் நேற்று நடந்தது போல், ஒரு சிலர் செய்த தவறுக்கு, ஒரு இனத்தையோ சமூகத்தையோ குறை கூறுவதற்கு வழி வகுத்திருகின்றன. இன்று நிலைமை திருந்திய போதும் சம்பவங்களின் உண்மையை நிலைநாட்ட வரலாற்று ஏடே ஆதாரம். பத்திரிகைகள் தாமும் இதனையே நம்பி வாழ்கின்றன.

கடந்த யூலைக்கலவரத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களுக்கு யார் உத்தரவாதம் அளிப்பார்?

இதன் முதலாவது ஆண்டு நினைவையும் அஞ்சலியையும் நடத்திய தமிழ் மக்கள் அநியாயமாகக் கொலையுண்ட தமிழ் மக்களின் விபரங்களைத் திரட்ட முடிந்ததா?

இந்த முயற்சியில் ''கெட்டும் பட்டினம்'' என்ற நாடோடி வாசகம் நினைவுக்கு வருகின்றது-

பட்டினமென்று நாம் கருதுவது இலண்டனையே, சர்வதேச மன்னிப்புச் சபை இலண்டனில் அமைக்கப் பட்டிருப்பது அதிசயமல்ல; எவ்வாறு இலண்டன் அன்று இலங்கையை ஆட்சி செய்ததோ அவ்வாறு இலங்கை வாழ் தமிழ் மக்கள் இன்று இலண்டனை ஆட்டி வைக்கின்றனர்; அதுவும் அதிசயமல்ல.

சர்வதேச மன்னிப்புச் சபையென்றால் இன்றைய இலங்கை ஆட்சிக்கு ஒங்காளம்; அதற்கு மாற்று மருந்தும் அச்சபையால் ஆகவேண்டுமென நாம் பிரார்த்திக்கின்றோம்.

அதுநிற்க, அந்தக்காலத்தில் லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் பட்டியலைப் படிக்க கப்பலைக் (கடல்) காத்திருந்தோம்.

இன்று 1983-ம் ஆடி தொடக்கம் 1984 பங்குனி வரைக்கும் இலங்கை காவற்படையினரால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் விபரம் (முழுவிபரம்) மட்டுமல்ல, விசாரணை, மனித உரிமைகள் எவ்வளவுதூரம் இங்கு மீறப்படுகின்றன பற்றிய அறிக்கை திரண்ட ஒரு நூல் இவ்வளவு விரிவாக பக்கம் சார்பற்ற முறையில் வெளிவந்திருக்கிறது.

இந்தப் பட்டியலில் சிங்கள மக்கள் எவரின் பெயராவது காணப்படவில்லை; இந்தக் கொடுமைகளுக்குப் பலியானவர்கள் தமிழ் மக்கள்; பாடசாலை மாணவர், மரக்கறி விற்பனையாளர், மீனவர், தச்சுத்தொழிலாளி, பஸ்நடத்துநர், பெளஷனர், பட்டதாரி நிர்வாகிகள் ஏழைவிவசாயிகள் போன்ற நாட்டின் குடிமக்கள்.

அறிக்கையும், பட்டியலும், அவற்றுடன் அரசாங்கத்துக்கு இதனைத் தடுக்க வேண்டுமென்ற பண்புடைய வேண்டுகோளும் ஒருங்கு சேர்ந்த அருமந்த ஆவணம் இது.

குப்பைக்குள் காணப்படும் கிழிந்த கடதாசியில் வரலாற்றின் மூலப்பொருள் சேகரிக்கும் திறமையில் உருவான கலையின் விளைவே ஆராய்ச்சிக்குதவும் இவ்வித நூல்வடிவங்கள்.

இலண்டன் சபையைப் போற்றி டபிள்சலாம்போடுவதுடன் எச்சரிக்கை ஒன்று விடுக்கவேண்டும். இரத்தக்கொதிப்பு, தூக்கமின்மை, இதய நோய், மனமெலிவு, மனமுறிவு போன்ற வியாதிகளால் அவஸ்தைப்படுபவர் இந்த நூலைத் தவிர்க்கவும்.

ஒரு உதாரணம்: பக்கம் 29 மானிப்பாய்ச் சந்தைக்கு முன்உள்ள 'சுதர்சன்' என்ற மின்சார விற்பனை நிலையத்துக்கெதிரே கடந்த யூலை 24 ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற கொலைகள் விபரம் கோரப் படங்களுடன் காணப்படுகிறது; இவ்வித நுணுக்கமான விபரங்களைப் படிக்கும் மனத் தைரியம் எல்லோருக்கும் உண்டன்று; ஆனால் நாகரிக உலகம் இதனை அறியக்கடமைப்பட்டுள்ளது

வியாக்கியானங்கள் எவ்வாறாயினும் மேனாட்டு நாகரிகத்தில் உதயமாகி வளர்ந்துவந்த இவ்விததூய வரலாற்றுத்தத்துவம் எங்கள் வருங்காலத்துக்கு மிகவும் அவசியம்.

எனவே தமிழிலும் சிங்களத்திலும் இதனை மொழி பெயர்த்து உதவுவது இன்றைய அவசிய தொண்டாகும்.

# திருமலை முற்றவெளியில் பஸ் நிலையம் நிறுவப்படுமா?

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் முற்றவெளியில் ஒரு பகுதியில் பஸ் நிலையத்தையும், பஸ் நிலையம் இருந்த இடத்தில் நவீன சந்தையையும் நிறுவவேண்டும் என்று நகர அபிவிருத்தி அதிகார சபை சமர்ப்பித்துள்ள திட்டத்தை, திருகோணமலை நகரசபை செயற்படுத்துமா?

அப்போதைய திருமலை எம். பி. யான திரு. இரா. சம்பந்தனும் தெரிவு செய்யப்பட்ட திருமலை நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள் முற்றவெளியில் பஸ் நிலையம் நிறுவப்படுதலைப் பலமாக எதிர்த்து வந்தனர்.

இதுசம்பந்தமாகப் பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸ தலைமையில் திருமலை நகரமண்டபத்தில் நடந்த மாநாட்டிலும் திரு. சம்பந்தன் இத்திட்டத்தைப் பலமாக எதிர்த்தார்.

அந்த மகாநாட்டைத் தொடர்ந்து புதிய பஸ் நிலையத்தை திருமலை ரயில்வே நிலையத்திற்கு எதிரில் உள்ள காணியில் அமைக்கவேண்டும் என்று திரு. சம்பந்தன் விடுத்த வேண்டுகோளை, அமைச்சு அதிகாரிகள் ஆராய்ந்தனர். திரு. சம்பந்தனின் யோசனைக்குச் சிலரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியது. இந்த நிலையில் எங்கு பஸ் நிலையம் நிறுவுவது என்ற பிரச்னை இழுபறியில் இருந்தது.

இப்பொழுது நகர அபிவிருத்தி அதிகாரசபை முற்றவெளியில் ஒருபகுதியில் தற்போதைய பஸ் நிலையத்திற்கு எதிரில், புதிய பஸ் நிலையம் நிறுதப்படவேண்டும் என்று திட்டம் தயாரித்து நகர சபைக்குச் சமர்ப்பித்துள்ளது.

இதற்காக முற்றவெளியில் அரை ஏக்கர் காணியை உடனடியாகப் போக்குவரத்துச் சபைக்குக் கொடுக்கும்படி நகர அபிவிருத்தி அதிகார சபை, அரசாங்க அதிபரைக் கோரியுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபை சமர்ப்பித்த திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பு நகரசபைக்கு வழங்கப்பட்டு உள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப்படி, ஏகாம்பரம் வீதி, மத்திய வீதி, பிரதான வீதி, டொக்யார்ட் வீதி ஆகியனவும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

முற்றவெளியில் உள்ள சட்ட விரோதக் கடைகளுக்குறியவர்களுக்கு, மாற்றுக் கடைகளை வேறுஒரு இடத்தில் நகரசபையேகட்டி வழங்கவும், நகர அபிவிருத்தி அதிகாரி சபையின் இத் திட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது.

**செய்திக் கடிதம்: திருமலை நிருபர்**

### நாளை ஆடிப்பூரம்

# உலக அன்னையின் அருள்பெறற்குரிய தினம்

மனிதனைக் கண்ணுற் காணலாம். ஆனால் மனிதனின் உயிரையோ- அன்பையோ கண்ணால் காணமுடியாது. ஆனால் இறைவனுக்கு உயிருக்கு உயிராக இருக்கும் சிவனைக்கண்டு வணங்க ஒரு மூர்த்தம். சிவபிரானது அன்பை- இரக்கத்தைக் கருணையைக்கண்டு வணங்க ஒரு மூர்த்தம், சூரியனிலிருந்து பிரிக்க முடியாத ஒளிபோன்று சிவபெருமானிலிருந்து பிரிக்க முடியாத திருவருட் சக்தியை வணங்குவது அவசியம்.

**அருளாளன்**

சிவசக்தியாகிய அம்பிகை மலரில் மணம்போல உலகெங்கணும் நிறைந்துள்ளாள். சிவபெருமானின் ஐந்தொழிற் கூத்தின் பயன் அனைத்துயிர்களையும் உய்விப்பதற்காக சதா காலமும் நடன தரிசனம் செய்து கொண்டிருக்கிறாள்.

சர்வஜீவ தயாபரியாகிய அம்பிகையை வழிபட்டு அதிக வரம் பெறலாம் என்ற அனுபவத்தின் விளைவாக நவராத்திரி, ஆடிப்பூரம், ஐப்பசிப் பூரம், பூரணைதினம் முதலிய புண்ணிய காலங்களில் அம்பிகையை விசேடமாக வழிபட வேண்டும்.

மீனாட்சியம்மை மதுரையில் தடாதகைப் பிராட்டி என்னும் பெயருடன் தோன்றிய நாள் ஆடிப்பூர நன்னாளே என்பர்.

வருடம் தோறும் ஆலயங்களில் சுவாமிக்குத் திருக்கலியாண விழாச்செய்து சுவாமியின் மணக் கோலத்தைக் கண்டு மகிழ்வதுபோல் ஆடிப் பூரத்தில் சில ஆலயங்களில் வளைகாப்பு- பூப்புநீராட்டு என்பனவும் செய்கின்றனர்.

அம்பிகை சுவாமியைத் திருமணம் செய்தற்காகத் தவம் செய்யத் தொடங்கியநாள் கூட ஆடிப்பூரமென்று கருதி சில ஆலயங்களில் அம்பிகைக்குத் தவக்கோலம் புனைந்து தரிசித்து வழிபடுவதும் ஆடிப்பூர நாளாகவே உள்ளது.

சும்பன்-நிசும்பன், மகிஷன் முதலிய அசுரர்பலம் பெற்றுத் தேவர்களுக்கு இடைஞ்சல் விளைவித்த வேளைகளில் அம்பிகை தேவர்களை இரட்சித்ததுபோல தன்னை வணங்கும் அடியார்க்கு தீய சக்திகள் வலிமைபெற்றுத் துன்புறுத்தும்போதும் இரட்சிப்பாள். அபிராமி பட்டரின் பெருமையை உலகறியச் செய்தது போலதன் அன்பர்களை அம்பாள் பெருமைப்படுத்துவாள்- சீர்காழிப்பிள்ளையாரை ஞான சம்பந்தர் ஆக்கியது போல் ஞானப்பாலூட்டுவாள். பாரதியால் பாரதநாட்டுக்கு வீரமும் சுதந்திர வேகமும் ஏற்படுத்திய சக்தி மூடராக கல்வியறிவற்றவர்களாகவிளங்கிய கம்பனையும், காளிதாசனையும், காளமேகப் புலவரையும் கவியரசர்களாக்கியது போல் கல்விச் சிறப்பையும்கவிச் சிறப்பையும் வழங்குவாய்.

தன் பிள்ளையின் சிறப்பைத் தன் சிறப்பாகக் கண்டு உவக்கும் தாய்போல் உலகின் சகல உயிர்களின் சுபிட்சத்தைக் கண்டு உவக்காதிருக்கும் அன்னை நம்மத்தியில் தையல் நாயகியாகவும், நாகபூஷணியாகவும், வீரமாகாளியாக

(5-ம் பக்கம் பார்க்க)

### வண்ணை-கிழக்கு

# மகாமாரியம்மன் தேர் இன்று

அன்னை மகாசக்தியைத் தாயாகவும் சிவத்தைத் தந்தையாகவுங்கொண்டு, அம்மையப்பனைக்கண்டு வழிபாடு இயற்றி வருவது சைவமக்கள் மரபாகும். பல்வேறுபட்ட அன்னை வடிவங்களுள் ஒரு வடிவம்தான் அருள்மிகு அன்னை மகாமாரியாகும். மகிஷமர்த்தன் என்னும் அசுரனுடைய கொடுமையிலிருந்து தேவர்களை மீட்பதற்கு அன்னை எடுத்துக்கொண்ட தோற்றம்தான் அன்னை மகாமாரித்தாய் என்றும் கூறப்படுகிறது.

இத்தகு சிறப்புப் பெற்ற மகாமாரி எழுந்தருளிக்கோயில் கொண்டருளிய இடம்தான் சிரோங்கும் எழில்மிகுந்த திருவண்ணை மாநகரம் வண்ணார் பண்ணையில் எச்சாட்டி நிலந்தன்னில் எழுந்தருளி அடியார்கள் அன்பால் பூசிக்கப்படுபவள்தான் அருள்மிகு அன்னை மகாமாரி. எச்சாட்டி என்பது எட்சாயினி + ஆட்சி என்று பொருள்படும். எட்சாயினி என்பது அன்னையின் ஒரு திருநாமம். ஆட்சி என்பது பரிபாலனம்என்று பொருள் அதாவது மகாமாரியினது பரிபாலனம் என்பதுவே பொருள் ஆகும்.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இக்கிராம மக்களால் அன்னையின் யந்திரம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு [illegible] ஆலயத்தின் மேலீட்டால் அம்பிகையின் திருவுருவத்தினைப் பிரதிஷ்டைசெய்து அலங்கார உற்சவங்கள் பத்துதினங்கள் சிறப்புடன் நடாத்தி அகமிக மகிழ்ந்தார்கள் மக்கள். சுமார்

**கனக. விவேகானந்தன்**

அரைநூற்றாண்டுக் காலமாக இந்த அலங்கார உற்சவங்கள் நிகழ்ந்துவந்தன. பின் புனர்நிர்மாண வேலைகள் யாவும் செய்யப்பட்டு 1929ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. மகாகும்பாபி

(5ம் பக்கம் பார்க்க)

### அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி தேர் இன்று

# உனைத் தொழக் கிருபை தா!

அண்டச ராசரமெங் கும்நிறைந்தி ருக்குமம்மை
கண்டத்தி லாலங்கொண் டுள்ள சிவனையே
கண்டதும வன்றாள் வணங்குமரு ளம்மைதான்
கண்கண்ட மாரியம்மை யே!

நவமான நம்பிரப் பங்குள வூரில்
நவரத்தி னம்போற்கோ வில்கொள் மணியே!
தவறாம லுன்னைத் தொழக் கிருபை தாரும்
தவறாது மாரியம்மை யே!

— சுண்டிக்குழி. க யோகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வ. போ. ச. கட்டாணை மனு:

# மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விண்ணப்பம் நிராகரிப்பு!

(யாழ்ப்பபணம்)

சாவகச்சேரியிலுள்ள வடபிராந்திய தொழில் நீதிமன்றத் தலைவர் திரு. எஸ். என். குருசாமி, வழக்கொன்றில் அளித்த இடைக்கால உத்தரவை ஆட்சேபித்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் சார்பில் தாக்கல் செய்த கட்டளையின் மீது அறிவித்தல் வழங்கும்படி கேட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கைசேர்ந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாரதியான எஸ். கந்தையா, வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கு எதிராக, சாவகச்சேரியிலுள்ள வடபிராந்திய தொழில் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைதாக்கல் செய்திருந்தார் இவ்விண்ணப்பத்தில் 82, ஏப்பரல், 24ம் தேதி தம்மை வேலையிலிருந்து நியாயமற்ற முறையில் நீக்கியதாகவும். மீண்டும் வேலை பெற்றுத்தரும்படியும் வேலையில்லாதகாலத்தில் தனக்கு வேதனம் பெற்றுத்தரும்படியும் விண்ணப்பித்திருந்தார்.

வடபிராந்திய தொழில் நீதிமன்றத்தலைவர் திரு. எஸ். என். குருசாமி முன்னிலையில், இவ்விண்ணப்பம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில்தாக்கல் செய்தமறுமொழியில், 'வாதிதாமாகவே வேலையை விட்டுவிட்டதாகவும் தாங்கள் வேலையிலிருந்து நீக்கவில்லையென்றும், சென்றகாலவரவு திருப்தியற்றதாக இருந்ததென்றும் தெரிவித்திருந்தனர்.

விண்ணப்பம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முதலில் சட்டத்தரணி திருமதி விக்னேஸ்வரனும், பின்னர் சட்டத்தரணி திருமதி அம்பிகைபாலனும் பிரதிவாதிகள் சார்பில் ஆஜராஞர்கள். விண்ணப்பகாரர் சார்பில் சட்டத்தரணி எஸ். தியாகராசாஆஜரானார்.

விசாரணையின்பின்னர் வடமாநில தொழில் நீதிமன்றத் தலைவர், இடைக்கால உத்தரவு ஒன்றைப்பிறப்பித்தார்.

அந்த உத்தரவில், விண்ணப்பகாரர், 3 மாத காலம் சுகவீனம் என்று அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்பட்டதாலும், அதன்பிரகாரம் வேலைக்குபோகவில்லை என்பதாலும், விண்ணப்பகாரரை, வைத்தியபரிசோதனைக் குட்படுத்தி அரசினர்வைத்திய சாலையிலிருந்து தகுதிவாய்ந்த மருத்துவக் குழுவிடமிருந்து அறிக்கையை ஏற்றுக்கொள்வதெனவும் அந்தவைத்திய அத்தாட்சிப்பத்திரத்தை அணைக்கும்படி கேட்டுக்கொள்வதென்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இடைக்கால உத்தரவை ஆட்சேபித்து பிரதிவாதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்கட்டாணைமனு ஒன்று தாக்கல் செய்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் செனிவரத்தின, சிவாசெல்லையா ஆகியோர் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் டி. ஜே. தர்மரத்தின விண்ணப்பம் தொடர்பாக சமர்ப்பணங்களை தெரிவித்தார்.

நீதியரசர்கள் சமர்ப்பணங்களை கேட்டபின்னர் இந்த விண்ணப்பம் தொடர்பாக அறிவித்தல் கொடுப்பதையே மறுத்து விண்ணப்பத்தை நிராகரித்தனர். [க]

# "மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு கல்வி அவசியம்"

### அமைச்சர் 'இராசு'

(மட்டக்களப்பு)

''பாடசாலை வாழ்க்கையில் மாணவ சமுதாயம் வீணைக் காலத்தை செலவிடாமல் பயனுள்ள வழியில் செலவு செய்ய வேண்டும். எதிர்காலம் சிறப்புடன் விளங்க வேண்டுமென்றால் அழியாத செல்வமான கல்விச் செல்வத்தை உரிய முறையில் பெறவேண்டும்.''

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை தனது தொகுதியிலுள்ள ஏறுவூர் அ. த. க. பாடசாலையின் புதிய இருமாடிக் கட்டிடத்திற்கான அத்திவாரக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார். பாடசாலை அதிபர் திரு. எஸ். மாணிக்கராஜா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் ''மட்டக்களப்பு மாவட்டம் கல்வி உட்படசகல துறையிலும் முன்னேற்றப் பாதையில் சென்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் சில வருடங்களில் இம் மாவட்டம் தனது தேவைகள் அனைத்தையும் பெற்றுவிடும்'' என்று கூறினர்.

## வண்ணை வீரமாகாளியம்மன் தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள் மிகு வீரமாகாளியம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது. அஷ்டஹஸ்த்த அம்மன் தேரில் வீதியுலா வருவார். மறுநாள் ஆடிப்பூரத்தன்று தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

## நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

[கோப்பாய்]

சிறுப்பிட்டி உதய தாரகை வீதிக்கு மின்சார இணைப்பு செய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத்திட்ட நிதியில் பணம் ஒதுக்கீடு செய்யுமாறு உதய தாரகை சனசமூக நிலையம் கிராமஅபிவிருத்திச்சங்கம், மகளிர் அபிவிருத்திச் சங்கம் என்பன கூட்டாக மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் ஊடாக யாழ் அரசாங்க அதிபருக்கு சமர்பிக்கப்பட்டிருக்கும் மகஜரை ஏற்று, கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் திரு. க. கிட்டினர் உதயதாரகை வீதிக்கு மின் இணைப்பு செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்யுமாறு சிபார்சு செய்துள்ளார்.

## பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில்

# ஓய்வூதியம் வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் ஓய்வூதியப் பெறுபவர்களுக்கு இம்மாதத்திற்கான ஓய்வூதியப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, இளவாலை, பெரியவிளான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த [illegible]மார் 400க்கும் மேற்பட்ட ஓய்வூதியம் பெறுவோர் இத் தபால் அலுவலகத்தில் உரியகாலத்தில் தங்கள் ஓய்வூதியப் பணத்தைப் பெற முடியாது மிகவும் சிரமப்படுகின்றனர். தினமும் இவர்கள் தபால் அலுவலகத்திற்குவந்து பணம் கிடைக்காது ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இத்தபால் அலுவலகத்தில் பணத்தட்டுப்பாடு நிலவிவருவதால் மணி ஓடர்களுக்குப் பணம் பெறமுடியாதநிலையும் ஏற்பட்டுள்ளது,

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை ஊழியர்களின் சம்பளப்பணம் கடந்த 25-ம் திகதி வழங்கப்படவேண்டியிருந்தும் தபால் அலுவலகத்தில் பணமின்மையால் இதுவரை வழங்கப்படவில்லை.

யாழ். பிரதம தபால் அலுவலகத்திலிருந்து தினமும் 10 ஆயிரம் ரூபா இத்தபால் அலுவலகத்திற்கு கடந்த சில வாரங்களாக அனுப்பப்பட்டு வந்ததாகவும், சமீப நாட்களாக இப்பணம்கூட அங்கிருந்து அனுப்பி வைக்கப்படுவதில்லை என்றும் தபால் நிலைய அதிபர் தெரிவித்தார்.

## இன்று

[சுழிபுரம்]

முன்னாள் வட்டுக்கோட்டை எம்.பி. அமரர் தா. திருநாவுக்கரசுவின் சிராத்ததினம் இன்று திங்கட்கிழமை பண்ணாகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கூட்டுப் பிரார்த்தனை நினைவஞ்சலிப் பேருரை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இவ் வைபவத்தில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

### ''கிளிநொச்சியின் அபிவிருத்திக்கு

# தேசியஇளைஞர்சேவைமன்றம் பெரும் சேவையாற்றுகிறது''

(கிளிநொச்சி)

''கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அளப்பரிய சேவையாற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இப்பகுதி இளைஞர் யுவதிகளின் நலனில் ஆர்வம்கொண்டு இளைஞர் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க முன்வந்த இளைஞர் சேவைகள் மன்றத்தினரை பாராட்டுகிறேன். இவர்களது முயற்சிகளுக்கு எமது பங்களிப்பை வழங்கவும் தயாராக இருக்கிறோம்.''

இவ்வாறு கிளிநொச்சி திருநகரில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் நிலையமொன்றை திறந்து வைத்து உரையாற்றுகையில் கிளிநொச்சி கச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திருநகர் இளந்தளிர் இளைஞர் கழக ஆதரவில் நடைபெற்றஇவ்வைபவத்திற்கு கிளிநொச்சி இளைஞர் சேவை அதிகாரி திரு. பரராசசேகரம் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக தேசிய இளைஞர்சேவைகள்மன்ற உதவிஇயக்குநர்திரு. என். நாகேந்திரன் மாவட்டஇளைஞர் சேவை அதிகாரி திரு. எஸ். தர்மசீலன், இளைஞர் சேவைகள் மன்ற கூட்டுறவு அதிகாரி திரு. கே. சிவதட்சணமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வைபவத்தில் வைத்து இளைஞர் கழகத்திற்கு புத்தகங்களும், விளையாட்டு உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

விசேட சேவை அதிகாரி எஸ். தர்மபாலன், மாதர் சங்க தலைவி திருமதி. சோ. செல்வராணி, கிராமமுன்னேற்றசங்க செயலாளர் எஸ். சத்தியமூர்த்தி, செல்வன் ஜெயசேகரன், செல்வி தவசிறீ ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## மகாமாரி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஷேகத்துடன் அலங்கார உற்சவத்தைமகோற்சவமாகமாற்றி அன்னைக்கு விழா எடுத்து அகமகிழ்ந்தனர் அடியார்கள், அன்பர்கள் பல வருடங்கட்கு முன்பு சித்திரத்தேர் திருப்பணி ஆரம்பித்து 1973ஆம் ஆண்டு அழகிய சித்திரத்தேர் உருப்பெற்றது. இளைஞர்கள் மேலும்ஒருபடிசென்றுஸ்ரீவைரவப் பெருமானுக்கு வெகுசிறப்பானமுறையில் வெளியரங்காரத் திருவிழா வினையும் நடாத்தவிழைந்தனர். அவர்களது விருப்பிற்கும் அன்னையின் அருள் கிடைத்தது.

இத்தகு சிறப்புக்கள் யாவும் பெற்று விளங்கும் அன்னையின் ஆலய மகோற்சவம் நடந்த 17ம் தேதி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. வை. கருணாகரேஸ்வரக் குருக்கள் அவர்களால் துவஜாரோகணம் செய்யப்பட்டு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இனிய வாழ்வையும், பெறுதற்கரியபேரின்பமாகிய முத்தியினையும் தருபவளாகிய மகமாரித் தாய் இன்று தேரில் ஏறி, உள்ளமாகிய பீடத்தில் அமர்ந்து அருள்பாலிக்கவுள்ளாள். நாளை மறுதினம் தீர்த்தக்குளத்தில் திருமுழுக்காடித் திருவருள் பாலிக்கும் தீர்த்தவிழா நடைபெறும்.

சீரோங்கும் புகழ் மலிந்த
திருவண்ணை மாநகரில்
ஏரோங்கும் எழில் நிறைந்த
எச்சாட்டி நிலந்தன்னில்
பாரோங்கும் பத்தினியாள்
பாவவினை போக்கிடவே
தேரேறும் திருக்காட்சி
காணமல் போவரோ

## உலக

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

வும். துர்க்கையாகவும், கௌரியம்பிகையாகவும், மகாமாரியாகவும், பத்திரகாளியாகவும், முத்துமாரியாகவும் கோவில் கொண்டுள்ளாள்.

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரிபூரணானந்தம் போல எங்கெங்கும் சக்திமயமாக உள்ள அன்னையை வணங்க அனைத்தையும் பெற நல்லநாள் ஆடிப்பூரமாகும்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 08 — 05 — 1916

மறைவு: 30 — 06 — 1984

### அமரர் வை. சிவஞான சுந்தரம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

எமது அன்புத் தெய்வமே! அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் ஒளிவிளக்காகத்திகழ்ந்து எங்களை வாழ வைத்த எங்கள் ஆருயிர்த் தந்தையே! மண்ணுலகில் வாழ்ந்ததுபோதும் என்று நீங்கள் பொன்னுலகில் வாழச் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றென்றும் எம் மனதில் நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி இன்று (31-ம் நாள்) அஞ்சலி செய்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், பேரப்பிள்ளைகள்.
கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (1123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபையின் உத்தியோகபூர்வ பதவி ஏற்பு வைபவம் அண்மையில்சித்தன்கேணியில் நடைபெற்றபோது கழகத்தின் புதிய தலைவராக பதவிஏற்ற டாக்டர் லயன் த. பகீரதன் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம். பதவிப் பிரமாணத்தை நடாத்தி வைத்த முன்னாள் பிரதி மாவட்ட ஆளுநர் லயன் கே. குணரத்தினம், கழகத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் லயன். எஸ். நாகநாதர், வலயத்தலைவரும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியருமான டாக்டர் லயன் என். சரவணபவானந்தன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்: பண்டத்தரிப்பு நிருபர்)

# தாக்குதலுக்குள்ளான பெண் பலி!

(மன்னார்)

வயலில் வேலை செய்துவிட்டு வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தத 53 வயதுடையபெண்மணி ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி மரணமானார்.

மன்னார் - வாமதேவபுரத்தைச்சேர்ந்த பாக்கியம் என்ற பெண்மணியே இவ்வாறு மரணமானவராவார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது.

சம்பவதினம் வயலில் வேலை செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த பெண்மணியை இடைவழியில் வைத்து இனந்தெரியாத நபர் தடி ஒன்றினால் பலமாகத் தாக்கிக் காயப்படுத்தினர்.

பலத்த காயத்துக்குள்ளான பெண்மணி மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தனி நாயகம் அடிகள் நூல் நிலையம்

[நெடுந்தீவு]

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை நெடுந்தீவு உப அலுவலகத்தினால் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் நூல் நிலையத்திற்கு தனிநாயகம் அடிகளார் நூல் நிலையம் எனப் பெயர் சூட்டப்படவுள்ளது.

## ஆலய பரிபாலன சபைக் கூட்டம்

(கோண்டாவில்)

கோண்டாவில் நெட்டிலைப் பாய் பிள்ளையார் கோவில் பரிபாலன சபையின் ஆண்டுக் கூட்டம் அடுத்தமாதம் பதினொராம் திகதி ஆலய மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் புதிய நிர்வாகிகளும் தெரிவு செய்யப்படுவார்கள்.

## யாருடையது

வேரவில் என்னுமிடத்தைச் சேர்ந்த இ, நல்லலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை, யாழ். விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பி.பி இராசாவினால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' வில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# வீடியோ கொட்டகைகள்: 40 பேர் விண்ணப்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் வீடியோ கொட்டகைகள் அமைப்பதற்கு இதுவரை சுமார் 40 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இத்தகவலை மாநகர சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது;

''வீடியோ கொட்டகைகள் அமைப்பதற்கு விண்ணப்பம் செய்யப்பட்ட இடங்களை வைத்தியஅதிகாரிகள்நேரடியாகச் சென்று சுகாதார வசதிகள் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். அவரது அறிக்கை கிடைத்தபின்புதான் அனுமதி வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும்''

## திருமலையில் மீண்டும் சந்தை

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழ் மக்களுக்கு என்று தனியார் ஒருவரால் நடத்தப்படும் மீன், மரக்கறிச்சந்தை மீண்டும் புத்துயிர் பெற்றுக்காட்சியளிக்கின்றது.

நகரின் வீதிகளில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களை நகரசபை, பொலிசாரின் உதவியுடன் அகற்றியதைத் தொடர்ந்து, அங்காடி வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் தனியார் சந்தைக்கு மீண்டும் வந்ததைத் தொடர்ந்து இம்மாறுதல் ஏற்பட்டுள்ளது.

நகரின் வீதிகளில் அங்காடி வியாபாரம் இடம்பெறுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் நகரசபை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

## விசாரணை ஒத்திவைப்பு

(வவனியா)

அடம்பன் காத்தான்குளம் ப.நோ.கூ.சங்க முகாமையாளர் கொலை வழக்கு அக்டோபர் மாதம் 10ம் திகதி வவனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெறும்.

கடந்த 23ம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு பின்னர் மேற்படி திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1979ம் ஆண்டு சங்கக்கடை முகாமையாளரான சந்தன் கைத்தான் குலேந்திரன் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக இவரது தம்பியாரான கைத்தான் ஞானராஜா மீது தொடரப்பட்ட இக்கொலைவழக்கு மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. எதிரியின் சார்பில் சட்டத்தரணி மனகமனோகரனும். அரசதரப்பில் குரொசெட் தம்பையாவும் ஆஜராகியிருந்தனர்.

# இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி-15 (30-07-1984)
வாரம்-திங்கள்
திதி-துதியை பிற்பகல் 1-52 வரை
நக்ஷத்திரம்-மகம்முன் இரவு 11-51 வரை

மேடம்:- காதல் விவகாரங்கள் தலைதூக்கும் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும் களஸ்திரவழியால் பொருள் வரவுக்குமிடமுண்டு.

இடபம்:- திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் கடற்றொழிலார்கள் கவனம் செலுத்தவும்.

மிதுனம்:- புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள் தெய்வத்தின் அருளும் கிடைக்கும் தொழிலிலும் வெற்றியுண்டு,

கடகம்:- புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும் பொதுத்துறையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள் இல்லத்திலும் இனிமக்குமிடம் உண்டு.

சிங்கம்:- குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றி காணும் நன்றென நிமிர்ந்து நிற்பீர் குவிந்திடும் புகழும்.

கன்னி:- சுகபோகதினம் சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள் ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும்எல்லாம் இன்பமயம்

துலாம்:- நிதியில் முன்னேற்றம் விரும்பத்தக்கதாக இருக்கும் வணிகர்களாயின் அதிகஆதாயத்தை பெறுறார்கள் புத்திரர்களாலும் புகழ் குவியும்.

விருச்சிகம்;- பணத்தை அள்ளிவீசினாலும் பலன் மட்டாகத்தான் இருக்கும் சக தொழிலாளர்களுடன் மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

தனுசு;- இன்று நீண்ட காலத் தொடர்பொன்று துண்டிக்கப்படலாம் அவசர முடிவுக்குவராது நன்றாகச்சிந்தித்த பின் செயலாற்றவும்.

மகரம்;- வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாக காட்சியளிக்கும் இன்பத்தின்எல்லைக்கே இழுத்துச் செல்லப்படுவீர்கள் சுற்றுலா மேற் கொள்ளும் விருப்பம் மேலிடலாம்.

கும்பம்;- பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள் குறிப்பாக அரசியல் வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம் சிலர் புண்ணியஸ்தலயாத்திரைமேற்கொள்ளவும் இடமுண்டு.


மீனம்;- ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும் மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படலாம் பொறுமை அவசியம் எல்லாம் இறைவன் செயல்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினி

5-30 நாட்டுவளம் [சிங்களம்]
5-35 ஆடி ஊட் பெக்கர் கார்டூன் சித்திரம் [ஆங்கிலம்]
6-00 விளையாட்டுப் பயிற்சி [சிங்களம்]
6-20 சிறுவர் நிகழ்ச்சி
6-35 சஞ்சிகை நிகழ்ச்சி [தமிழ்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 'கலை அரங்கம் நாட்டிய நாடகம்
7-45 விவரணச் சித்திரம் [சிங்களம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 இசை நிகழ்ச்சி
8-55 'யெஸ் மினிஸ்டர், நகைச்சுவைச் சித்திரம் [ஆங்கிலம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்)
9-50 கடல் ஆராய்ச்சி திமிங்கிலம் [ஆங்கிலம்]
10-30 உலகச் செய்திகள்
10-35 கடல் ஆராய்ச்சி தொடர்ச்சி
11-50 நிகழ்ச்சிகள் முடிவு

# வளரும் தமிழோசை



பி. பி. சி. தமிழ்ச் சேவை தனது சேவை நிகழ்ச்சிகளை விரிவாக்கியுள்ளது. இது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றியவர்கள் படத்தில் வருமாறு:- கைலாஷ்பதவார்(நடுவில் இருப்பவர்), வலமிருந்து நிற்பவர்கள்:- எஸ். பி. செல்வநாயகம், கரோல் விற்வில், தொம்சன், கீதாபாலா. வலமிருந்து இருப்பவர்கள்:- ஆனந்தி, சங்கர்.

உலகமெலாம் தமிழோசை பரவவேண்டும் என்று அன்று பாரதியார் கண்ட கனவை இன்று நனவாக்கிக்கொண்டிருக்கும் லண்டன் பி. பி. ஸியின் தமிழோசை தனதுபணியில் இன்னொரு புதிய வரலாற்றைப் படைக்கிறது. இன்று ஜூலை 30-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வாரம் ஐந்து நாட்கள் தமிழோசை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகவிருக்கின்றன. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய ஐந்து நாட்களும் இரவு 9-45 முதல் 10-15 வரை இப்பொழுது ஒலிபரப்பாகும் வழமையான அலைவரிசைகளில் (.5,41,49 மீட்டர்) தமிழோசை நிகழ்ச்சிகளைக் கேட்கமுடியும். இப்பொழுது தமிழோசை நிகழ்ச்சிகள் செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று நாட்களிலும் ஏற்கனவே இடம்பெற்ற அம்சங்களின் தொகுப்பு நிகழ்ச்சியான ''வண்ணக் கதம்பம்'' ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஒலிபரப்பாகி வருவது குறிப்பிடத்தக்கது. இனி

(7ம் பக்கம் பார்க்க)

குளோபலுக்கு வாருங்கள்!
குவலயத்தோர் ஆகுங்கள்!!
குளோபல் ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராணி** (யாழ். நகர்)
இன்னும் சில தினங்கள் மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**
1-8-84 முதல்
**அன்புச் சகோதரர்கள்**

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30
சிவாஜி - பத்மினி
**பேசும் தெய்வம்**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
28 - 30-7-84
Daily
10-30, 2-30, 4-30, 7-00
Richard Dreyfuss
in
WHOSE LIFE IS IT ANYWAY
(Color-கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)
31-7-84முதல்
**உலகம் சுற்றும் வாலிபன்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
**when time ran out**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
From 29th
SEANCONNERY IN
DIAMONDS ARE FOREVER
(007)
(Color)

**ஹரன்** (யாழ்.நகர்)
10-30, 12-30, 2-30
4-30, 6-30, 8-30
Sylvia Kristel
Nicholas Clay in
LADY CHATTERLEY'S LOVER
(strictly for adults)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
கொழும்பில் 130 நாட்கள் ஓடி சரித்திரம் படைத்த ஆங்கில திரைக்காவியம்

**வின்சர்** (யாழ். நகர்
Daily 10-30, 2-00,
4-30, 7-00
30th — to 31st
HEROES OF TELE MARK
The academy award winners
Starring
Kirk Douglas
Richard Harris
(Colour-panavision)

மீண்டும் ...கடைசித் தடவையாக
**றீகல்** (யாழ்.நகர்)
31-7-84 வரை
Henry Febar...
EYE OF THE NEEDLE
ஜேம்ஸ் பொன்ட் படத்தைப் பார்ப்பதுபோன்ற பிரமை. எதற்கும் கலவரப்படாமல் கச்சிதமாக காரியத்தை முடிக்கும் பயங்கரமான ஒற்றன். ஜேர்மனிய இரகசிய உளவாளியின் நடவடிக்கைகள் - விறுவிறுப்பு - சஸ்பென்ஸ்
Adults Only

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
30—31
சிவாஜி-விஜயா
**எதிரொலி**
From 1st.
THE "BURNING"
Strictly for Adults
(Color)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 4-30, 7-00
Clint East wood in
**FIRE FOX**


# "200 பாடசாலைகளை நிர்வகித்த தனி மனிதர்"

## 'இந்துபோட்டு'க்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"இப்போது பாடசாலை நிருவாகம் மாறிவிட்டது. 25 நிருவாக மாவட்டங்களில் 31கல்வி மாவட்டங்கள் இருக்கின்றன. சில கல்வி மாவட்டங்கள் நூற்றுக்கு குறைவான பாடசாலைகள் கொண்ட மாவட்டங்களாக உள்ளன. இந்த மாவட்டங்களில்கூட வித்தியாபதி, நிர்வாக அதிகாரி, நிதிமுகாமையாளர், கல்வி அதிகாரிகள், வட்டாரக் கல்வி அதிகாரிகள், லிகிதர்கள் என்போர் பாடசாலைகளின் பராமரிப்பை நடத்துகின்றனர். ஆனல் 'இந்து போட்' இராசரத்தினம் ஆளணியோ, எந்த ஒரு அமைப்புமோ இன்றி இருநூற்றுக்கும் அதிகமான பாடசாலைகளை இலங்கை முழுவதிலும் நிர்வகித்தார். ஆனபடியாற்றான் அவரது நிர்வாகத் திறமையை நாம் பாராட்டுகிறோம்."

இவ்வாறு 'இந்து போட்' இராசரத்தினம் நூற்றாண்டு விழாவையொட்டி வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் திரு. ப. சிவஞானசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது 'இந்து போட்' ஞாபகார்த்த பணிக் குழுவின் துணைச் செயலாளர் திரு. நா. சோதிநாதன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "எவ்வித நிதிவசதியும் இன்றி இப்பாடசாலைகளை அமைக்க இவர் தான் படித்த சட்டநூல் அறிவையும், அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தினார். இவருடைய சொந்தப் பிள்ளைகளின் நலனைக் கவனிக்காமல் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் இவ பாடுபட்டார். இதனாற்றான் இவரது பாடசாலைகளில் கல்வி கற்று சைவசமயச் சூழலில் வளர்ந்த பலரை இன்று காணக்கூடியதாக உள்ளது. வன்னிப் பகுதியைநாடி யாழ்ப்பாண மக்கள் குடிபெயரத் தொடங்கிய காலத்தில் வன்னிமாவட்டங்களுக்குச் சென்று அங்கும் பாடசாலைகளை அமைத்து சைவத்தையும் தமிழையும் நன்குகற்றுணர்ந்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் தேடி அனுப்பி இங்கு சேவை செய்யச் செய்ததன் மூலம் வன்னிப் பகுதியிலும் கல்வி வளரப் பாடுபட்டவர்" என்றுபேசினார்.

இக் கூட்டத்திற்கு தலைமை வகித்த பாடசாலை அதிபர் திரு. ப. சிவஞானசுப்பிரமணியம் பேசுகையில், 'இந்து போட்' இராசரத்தினம் போன்ற அறிஞர் பெருமக்களின் விழாக்களை இப்பாடசாலையில் கொண்டாடுவதால் நாவலரின் அபிலாசைகளை செயற்படுத்த பாடுபட்டவர்களை கௌரவிக்கிறோம். மற்ற பாடசாலைகளைவிட இப் பாடசாலையில் இப் பெரியாரது விழாவைக் கொண்டாட வேண்டிய தேவையொன்று உண்டு" என்று கூறினார். வித்துவான் இ. திருநாவுக்கரசுவும் பேசினர்.

## தேச விரோத...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)


சக்திகளுடன்தொடர்புகொண்டிருப்பதை அறிந்ததனுலேயே அக்கட்சியிலிருந்து அதன் 12 உறுப்பினர்களும் தமது பதவிகளை விலக்கிக்கொண்டனர் என்றும் ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு தெரிவித்தது. (கி)

## வளரும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் மேற்குறிப்பிட்ட ஐந்து நாட்களிலும் தமிழோசை நிகழ்ச்சிகள் நேரடியாகவே இடம்பெறவிருக்கின்றன இதன் மூலம் உலகில் நடைபெறும் முக்கிய செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளக் கூடியதாகவிருக்கும். தமிழோசை வாரத்தில் ஐந்து நாட்கள் ஒலிபரப்பாகவிருக்கிறது என்ற செய்தியை அறிவித்திருக்கும் அதன் தயாரிப்பாளர் திரு. எஸ். சங்கரமூர்த்தி (சங்கர்) தமிழோசை விரைவில் தினந்தோறும் ஒலிபரப்பாகும் வாய்ப்பும் இருக்கிறது என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

தகவல் அ. கனகசூரியர்.



கிளிநொச்சி ரோட்டரிக் கழக புதிய தலைவரின் பதவி ஏற்பு வைபவத்தில் தலைவர் திரு. பா. வை. ஜெயபாலனைப் பாராட்டி கிளிநொச்சி அரச அதிபர் திரு. என். ஜெயநாதன் பேசிக்கொண்டிருப்பதைப் படத்தில் காண்க.

## தமிழாசிரியர் சங்க கிளிநொச்சி கிளை

(கிளிநொச்சி)

இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் புனிதரேசாள் மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாக தெரிவாகினார்கள்.

தலைவர்:-கா. நாகலிங்கம் உப தலைவர்:-பொன். தில்லைநாயகம், கே. கே. இராமஜெயம், செயலாளர்:-செ. நடராசா, உப செயலாளர்:-வே. பாலசுந்தரம், பொருளாளர்:-நா. நடராசா. செயலவை உறுப்பினர்கள்: -க. சிவலிங்கம் செ. சின்னத்துரை, ஆ. சந்திரசேகரம், க. ஆறுமுகதாஸ், ஆ. ஜெகநாதன், கி. சின்னராசா பொ. சபாபதி.

## புதிய உறுப்பினர் நியமனம்

(ஊரெழு)

ஊரெழு பொலிஸ்-பொது மக்கள் நல்லுறவுக் குழுவின் புதிய உறுப்பினராக திருமதி. மதியாபரணம் முருகையா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி குழுவின் உறுப்பினர் ஒருவர் அதன் கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக சமூகமளிக்காத காரணத்தினுல் பதவி இழந்துள்ளதால் அவரின் இடத்திற்கே மேற்படி புதிய நியமனம்செய்யப்பட்டிருக்கிறது.

## மகோற்சவம்

(சுன்னுகம்)

சூராவத்தை முத்துமாரி அம்மன் கோவில் கொடியேற்ற வைபவம் நாளை மறுதினம் நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து 10ம் திகதி ரதோற்சவமும் 11ம்திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## சதுர்த்தியும் ஆடிப்பூரமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி விநாயகராலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை சதுர்த்தித் திருவிழாவும் ஆடிப் பூரத்தையொட்டி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் விழாவும் நடைபெறும். மாலை விநாயகரும் அம்பாளும் வீதிவலம் வருவார். (ப)

## புதிய நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு மகளிர் குழுவின் புதிய நிர்வாகிகள் வருமாறு:

தலைவி: திருமதி பேளி அத்தனசியார், உபதலைவிகள்; திருமதி ரூபி ஜேசுதாசன் திருமதி மங்கையர்க்கரசி துரைசிங்கம், செயலாளர்: திருமதி எலக்ரீஷியா யேசுதாசன் பொருளாளர்: திருமதி எஸ். தேவராசா.

செயற்குழு உறுப்பினர்களாக 16 பேர் தெரிவாகினர்.


**குரொஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்**

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாண ஒழுங்குகள் செய்ய வேண்டுமே என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானுலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

**Cross Travel Services(Pte) Ltd.**
PASSENGER SALES AGENT FOR SWISSAIR
Telephone: No: 22040, 22065.
TELEX No. 22207 (C. T. S) C E
**CTS**

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது "குரொஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை" ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

- வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்.
- உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

**Cross International Telecommunication Services**
(குளிரூட்டப்பட்டது–பஸ்நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடி)
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S.) C E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் இளைஞர் பலி! லொறிச் சாரதிக்கு ரிமாண்ட்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்-அரசடி வீதிச் சந்தி லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் பலியான கொட்டடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வக் குமாரின் (25 வயது) மரணவிசாரணை நேற்று நடைபெற்றபோது லொறிச் சாரதி சின்னத்தம்பி தங்கையா ஆகஸ்ட் 1ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணையை நடத்தினர்.

லொறி அரியாலையில் மண் ஏற்றிக்கொண்டு சங்கானைக்குச் சென்றுகொண்டிருந்ததாகவும், அரசடி வீதி - பிறவுண் வீதிச் சந்தியைக் கடந்து சென்றபோது கொக்குவிலிலிருந்துவந்த மோட்டார்சைக்கிள் லொறியின் வலதுபக்கத்தில் மோதியதால் மோட்டார் சைக்கிளில் வந்த செல்வக்குமாருக்கு நெற்றியில் பெரிய காயமேற்பட்டு பின் மரணமானதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

தொழிலாளி செல்லையா தயாபரன், லொறிக் கிளீனர் வேலன் செல்லத்துரை ஆகியோர் சாட்சியமளித்தனர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி. விசாரணையை ஒத்தி வைத்தார். (க)

## குருவாக திருநிலைப்படுத்தல்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கத்தோலிக்க பங்கைச் சேர்ந்த அருட் சகோதரர் செ. சகாயதாசன் புதிய குருவாக எதிர்வரும் 4ம் திகதி சனிக்கிழமை யாழ். புனித மரியாள் தேவாலயத்தில் யாழ். பேராயர் அதி வண. கலாநிதி பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையினல் திருநிலைப்படுத்தப் படவுள்ளார்.

# இப்படியும் நடக்கிறது

நேற்று வெளியான (தேசியத் தினசரிகளின்) வாராந்தப் பதிப்புகளில் வெளிவந்த விஷயம் இவை:

''சண்டே ஒப்ஸேவர்'' பத்திரிகையில் வெளிவந்த கார்ட்டூனில் முதல் படம்: நெற்றியில் திருநீறும், பொட்டும் வைத்த 'அவர்' புலிக்குட்டியைக் கையில் ஏந்தி, பால் ஊட்டுகிறர். அடுத்த படம்: புலி பெரிதாக வளர்ந்து மக்களை விரட்டுகிறது. 'அவரும்' மின்னல் வேகத்தில் ஓடுகின்றர்.

''வீக்கென்ட்'': புலிவாலை 'அவர்' பிடித்துக்கொண்டிருக்கின்றர். இது ஒரு வாராந்த விமர்சனம்.

''தி ஐலண்ட்'': இரண்டு கார்ட்டூன் படங்கள். 1983-ல் 'அவர்' ஜனதிபதியிடம் ஏதோ மகஜர் கையளிப்பது போன்று உள்ளது முதல்படம். இரண்டாவது படத்தில் அதாவது 1984 என்று குறிப்பிடப்பட்டுள்ள கார்ட்டூனில், ஜனதிபதி ஒரு புலியைப் பார்க்கின்றர். புலியின் அருகில் சில எலும்புத் துண்டுகளுடன் அந்த மகஜரும், அணிந்திருந்த மூக்குக் கண்ணடியும் காணப்படுகின்றன.

'அவர்' 'புலி'யை வளர்ப்பது யார்?

-ஊடுருவி

# "நாட்டின் வளர்ச்சி பெண்கள் கையில்"

(அச்சுவேலி)

''மகளிரின் கையில்தான் நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது. இதை நன்கு உணர்ந்துதான் உலகளாவிய ரீதியில் மகளிரின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கப்பட்டு வருகிறது. இந்த வழியில் தம்பாலை கூட்டுறவு மகளிர் குழுவினராகிய நீங்களும் தையல் கைத்தொழிலைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். இத்தொழில் உங்கள் வாழ்வுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்தும்.''

இவ்வாறு தம்பாலை கூட்டுறவு மகளிர் குழுவினரால் ஆரம்பிக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய தொழிலதிபர் திரு. க. கனகராசா கூறினர்.

அவர்தொடர்ந்து உரையாற்றுகையில்: 'இலங்கையில் தைக்கப்பட்ட ஆடைகளுக்கு வெளிநாடுகளில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதை நன்குணர்ந்து நீங்களும் பயிற்சியின் பின்னர் ஒரு சங்கமாகச் செயல்பட்டு ஏற்றுமதிக்கான ஆடைகளைத் தைத்து எமது நாட்டின் அந்நியச் செலவணியைச் சம்பாதிக்கவும்' உங்கள் வாழ்வுக்கும் கிராம வாழ்வுக்கும் உதவ வேண்டுமென்று கூறினர்.

இவ்வைபவத்தில் முன்னள் யாழ். மாவட்டசபைத் தலைவர் திரு. ந.இராசேந்திரம், தேசிய கூட்டுறவுச் சபைச் செயலாளர் திரு. இ. சிவசுப்பிரமணியம், அச்சுவேலி ப. நோ. கூ. சங்க மகளிர் குழு அமைப்பாளர் திரு. ஆ. கந்தசாமி உட்பட பலர் உரையாற்றினர்.

## வைத்தியசாலையின் குறைபாடுகளை நீக்க மக்கள் உதவவேண்டும்

[பண்டத்தரிப்பு]

''மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இவ்வைத்தியசாலையின் குறைபாடுகளை எமது சுகாதாரத் திணைக்களம் மாத்திரம் தனித்து நின்று நீக்கிவிடமுடியாது. இப்பகுதி மக்களுக்கு சகலவசதிகளும் கிடைக்கத்தக்க முறையில் இந்த வைத்தியசாலையை முன்னேற்றுவதற்கு இப்பகுதிப் பொதுமக்களும் குறிப்பாகப் பொதுநல இயக்கங்களும் எமக்குத் தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கவேண்டும்''

''இவ்வாறு வேராவில் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற வைத்தியசாலை அபிவிருத்தி சம்பந்தமான பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பகுதி நிர்வாக அதிகாரி திரு. பொ. இராசேந்திரம் குறிப்பிட்டார்.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் கே. நவரத்தினம், பற்றும் வேராவில் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் 'இவ்வைத்தியசாலையில் உணவு வழங்குவதற்கு இங்கு சமுகமளித்திருக்கும் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் நடவடிக்கை மேற்கொள்ளுவதாக உறுதியளித்திருப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது என்றர்.

## இன்று சிவன்கோவில் அம்பாள் தேர்

[யாழ்ப்பாணம்]

வண்ணர்பண்ணை ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி கோவில் அம்பாள் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகிறது.

இன்று காலை 7-15 மணிக்கு பூசை ஆரம்பமாகும். காலை 9-15க்கு அம்பாள் தேரில் எழுந்தருளுவார்.

## சண்டிலிப் பாய் கோவில் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் மாகியம்பதி அங்கணுக்கடவை மதுரை மீனுட்சி அம்மையின் கொடியேற்றத் திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமைஆரம்பமாகிறது.

பத்து நாட்கள் திருவிழா தொடர்ந்து நடைபெறும். அடுத்த மாதம் 9-ம் திகதி தேர்த் திருவிழாவும், 10-ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (வி)

## கி. அபி. சங்கம் அமைக்க அங்கீகாரம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம் என்றபெயரில் புதிய கிராம அபிவிருத்திச் சங்கத்தைஅங்குரார்ப்பணம் செய்வதற்கு கிராமஅபிவிருத்தி திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இச்சங்கத்தின் அங்குரார்ப்பணத்தைக் கூட்டம் அடுத்த மாதம் 5-ம் திகதி பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ மண்டபத்தில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# மரண அறிவித்தல்

## கந்தையா சுப்பையா

புங்குடுதீவு, 4-ம் வட்டாரம் கந்தையா சுப்பையா அவர்கள் 28-7-84 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், பரராசசிங்கம் [அருமை] (அருமை போசன சாலை, யாழ்ப்பாணம்), அன்னசோதி, தனவதி, அருள்பாக்கியம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கே. எம். சண்முகம் [வர்த்தகர், யாழ்ப்பாணம்] கனகரெத்தினம், சிவஞானம் [வர்த்தகர், யாழ்ப்பாணம்],புஸ்பவதி ஆகியோரின் அன்பு மாமனரும், அம்பிகாபதியின் (வை. சி. சி. கு., யாழ்ப்பாணம்) பெரியதந்தையாருமாவார். அன்னரின் ஈமக்கிரியை 30-7-84 திங்கட் கிழமை காலை 10-00 மணிக்கு கேரதீவு மயானத்தில் நடைபெறும்.

1120

# மரண அறிவித்தல்

## பாலகுமார் குமாரசாமி

திரு. பாலகுமார் குமாரசாமி (கூட்டுறவுப் படை உத்தியோகத்தர், காரைநகர்) அவர்கள் அகால மரணமானர். அன்னர் திரு. பொ. குமாரசாமி [ஓய்வுபெற்ற நிலஅளவைக் கந்தோர் உதவி நிர்வாகஸ்தர்] திருமதி கமலாம்பிகை குமாரசாமி ஆகியோரின் அன்புப் புதல்வரும், திருமதி ரஞ்சினி பாலகுமார் [சிறைச்சாலை உத்தியோகத்தர். யாழ்ப்பாணம்] அவர்களின் அன்புக் கணவரும், ரஞ்ஜிற்குமாரின் அருமைத் தந்தையும் கமலகுமார், உதயகுமார், பிரேமகுமார் (கனடா), ஜெயகுமாரி, ராஜ்குமார், விஜயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னரின் ஈமைச் சடங்குகள் அவரது இல்லத்தில் 30-07-84 இன்று பிற்பகல் 4 00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரிகைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை.

1124

## முத்துமாரியம்பாள் உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலயவருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 2ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 10ம் திகதி தேர்த்திருவிழாவும், 11ம் திகதி தீர்த்தோற்சவமும், 12ம் திகதி பூங்காவனமும் நடைபெறவுள்ளன.

ஆடிப்பூரத் திருவிழா 31ம் திகதி இடம்பெறுகின்றது. மஹோற்சவத் தினங்களில் மங்கள வாத்தியக் கச்சேரி, வேத பாராயணம், கூட்டுப்பிரார்த்தனை, சமயச்சொற்பொழிவு முதலியன இடம்பெற இருக்கின்றன.

## ஆஸ்பத்திரியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்முகப்பரீட்சை செப்டம்பர் மாத முதல் வாரத்தில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான ஒழுங்குகளை யாழ்.பிரதேச சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம், யாழ். பிரதேச சுகாதாரப்பிரிவு நிர்வாக அதிகாரி திரு. பொ.இராசேந்திரம் ஆகியோர்மேற்கொண்டு வருகின்றனர்.

## மைதானத்தின் சிறப்பு

[கிளிநொச்சி]

வடபகுதியின் சிறந்த விளையாட்டு அரங்காக கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானம் மாற்றியமைக்கப்படும். எதிர்காலத்தில் வடமாகாண ரீதியிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கேற்ற சிறந்த சூழ்நிலைகள் இம்மைதானத்திலே உள்ளது. அதிக விஸ்த்தீரணம், கேத்திரஸ்தானம், போக்குவரத்து வசதி ஆகியன இம்மைதானச்சிறப்பிற்கு காரணங்களாக அமைகிறது.

இவ்வாறு கிளிநொச்சி றெட்றிக்கோ விளையாட்டரங்கில் நடைபெற்ற விளையாட்டுவிழாவொன்றின்போது பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என்.ஜெயநாதன் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் பிரபல்யம் மிக்க அருணேதயா விளையாட்டுக் கழகம் இவ்விழாவை வெகு சிறப்பான முறையில் ஒழுங்கு செய்திருந்தது.

## மகோற்சவம்

(சுழிபுரம்)

பொன்னலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மகோற்சவம் எதிர் வரும் சனிக்கிழமை காலை கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த் திருவிழா அடுத்த மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். அடுத்த நாள் தீர்த்தத் திருவிழா சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக் கரையில் இடம்பெறும்.

## நேர்முகப் பரீட்சை

(பண்டத்தரிப்பு)

சங்கானை பிறப்பு இறப்பு, விவாகப் பதிவுகாரர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 9-ம் திகதி சித்தன்கேணி கணேச வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதாக யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் தெரிவித்துள்ளார்.



## தங்கப்பதக்கமும் பரிசும் பெற்றர்

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் இருபது வருடம் சேவையாற்றியதைக் கௌரவித்து மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் திரு. எஸ். நடராசாவுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. யாழ். பிராந்தியத்தில் சிறந்த அமைப்பாளர்களுக்கான இரண்டாவது பரிசும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது, 'ஹப்பி ஹோம் நடா' என்று வழங்கப்படும் இவர் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org